# ஹாஜிக்கொரு மடல்

அரபுமூலம்

## அல்முஹ்தஸிப் ஆலோசனை மையம்

தமிழில்

## M. அஹ்மத் (அப்பாஸி)

வெளியீடு

ரப்வா அழைப்பு வழிகாட்டல் நிலையம்

ரியாத், ஸவூதி அரேபியா

# رسالة إلى حاج

**إعداد**

**مركز المحتسب للاستشارات**

ترجمة

أحمد بن محمد

الناشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات

بالربوة – الرياض

**பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்**

(ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும்) எனது சகோதரன் ஹாஜிக்கு,

அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

இதோ உனது இரு பாதங்களும் இரு புனிதஸ்தலங்களைச் சுமந்திருக்கும் பூமியை இறுதியாக மிதித்துவிட்டது. காலா காலமாக உனது கற்பனையிலே ஓடிக் கொண்டிருந்த கனவு தற்போது கண்முன்னே நிதர்சனமாகி விட்டது. உனக்கு சுபசோபனமும் நன்மாராயமும் உண்டாகட்டும். வருக வருகவென உன்னை வரவேற்கிறேன்.

எனதன்பிற்குரிய சகோதரனே! உனதுள்ளம் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் அன்பால் நிறைந்திருக்கிறது என்பதை நான் நன்கறிவேன். அதனால் உன்னிடத்தில் ஒரு வினாத் தொடுக்கின்றேன். (உனது) இந்த ஹஜ் பயணத்தின் போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை நேரில் கண்டு, அவர்களுடன் கூடவே இருக்க உனக்கு விருப்பமா? நபியவர்களை நேரில் கண்டு

அவர்களுடன் கூடவே இருப்பதற்காக என்னுடைய அனைத்து உடமைகளையும் விற்க நேரிட்டால் அதனையும் கூட தயங்காமல் நான் செய்வேன் என்பதாகவே உனது பதில் இருக்கும் என்பது எனக்கு உறுதி. அவ்வாறாயின் எனது தோழனே! உனக்கு நான் கூறிக்கொள்வது : இன்றைய காலத்தில் நபியவர்களை நேரில் காண்பதென்பது யதார்த்தத்தில் சாத்தியமற்ற ஒன்றாக இருப்பினும், இப்புனிதப் பயணம் மூலம் அவர்களுடன் ஆத்மார்த்தமாகவும் கற்பனையிலும் கூடவே இருக்கலாம். அவர்கள் தரிசித்த இடங்களைத் தேடி அவற்றைத் தரிசிப்பதன் மூலமும், அவர்கள் தரிசிக்காத இடங்களை நீயும் தரிசிக்காமலிருப்பதன் மூலமும் இந்த நபியவர்களுடன் கூடவே நீ இருப்பது போன்றாகி விடுவாய்.

உனது நபியவர்கள் போகாமலேயே நீ போய்த் தரிசிக்கக் கூடிய சில இடங்களைத் தற்போது நான் உனக்குச் சுட்டிக்காட்டப் போகின்றேன். நபியவர்களை விட்டும் நீ தூரமாக விரும்பினால் (அவர்கள் போகாத) அந்த இடங்களுக்குப் போகலாம். மாறாக நீ அவர்களுடன் நெருக்கமாக விரும்பினால் அவர்கள் சென்ற இடங்களுக்கு மாத்திரம் செல். ஹஜ்ஜிலோ

உம்ராவிலோ நபியவர்கள் தரிசிக்காத, மக்களைத் தரிசிக்க அழைக்காத இடங்களுக்கு நீயும் போகாதே.

## வணக்கம் என்ற அடிப்படையில் தரிசிக்க முடியாத இடங்கள்

வணக்கம் என்ற ரீதியில் இது போன்ற இடங்களைத் தரிசிப்பது - அது எந்தக் கோணத்தில் எந்த நிலையில் இருந்தாலும் - நபிவழிக்கு முற்றிலும் மாற்றமானதாகவே அது அமையும். அவ்வாறான சில இடங்கள் வருமாறு :

### 1. மக்கா நூல்நிலையம் :

இது மஸ்ஜிதுல் ஹராத்தின் அமைவிடத்திலிருந்து கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. இந்நூல் நிலையம் கட்டப்பட்டுள்ள இடத்தில்தான் நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள் என சிலர் கருதிக் கொண்டிருக்கின்றனர். எவ்வாறிருப்பினும் நபியவர்கள் தனது ஹஜ்ஜிலோ உம்ராவிலோ ஒரு போதும் இவ்விடத்தைத் தரிசித்தது கிடையாது. அல்லாஹ்வின்பால் நெருங்கும் நோக்கில் இவ்விடத்தைத் தரிசிப்பது நபிவழிக்கு முரணானது.

எனவே அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யாராவது (வணக்கமாகச்) செய்தால் அது தட்டப்பட்டுவிடும். இவ்விடத்தைத் தரிசிப்பது ஸுன்னாவாக இருந்தால் அல்லது அதில் நலவிருந்தால் நபியவர்கள் தரிசித்திருப்பார்கள். அவர்களுக்குப் பின் நபித்தோழர்களும் தரிசித்திருப்பார்கள். அதிலுள்ள நூல்களை அறிந்து கொள்ளவும் அவற்றை வாசிக்கவும் நீ அங்கு சென்றால் அட்சேபனை கிடையாது.

அறிவிலிகளில் யாராவது அதனை வலம் வருவதையோ, கிப்லாவைத் தனது பின்புறமாக்கி அந்நிலையத்தை நோக்கித் தொழுவதையோ நீ கண்டால், அல்லது அக்கட்டிடத்தைத் தொட்டு அதன்மூலம் பரகத் தேடுவதைக் கண்டால் அத்தீய செயலைவிட்டும் அவனை நீ தடுத்துவிடு. நலினமாகவும், மிருதுவாகவும் அதிலுள்ள தவறைத் தெளிவுபடுத்து.

## 2. ஹிராக் குகை :

இது நபி (ஸல்) அவர்கள் நபித்துவம் கிடைக்க முன் அல்லாஹ்வைத் தியானித்த குகை. இக்குகைக்கென்று தனிச்சிறப்பிருந்தாலோ அல்லது அதனைத் தரிசிப்பது ஸுன்னத்தாக இருந்தாலோ நபித்துவம் கிடைத்த பின்பும் நபியவர்கள் இதனைத் தரிசித்திருப்பார்கள். நபித்துவத்திற்கும் ஹிஜ்ரத்திற்குமிடையில் நபியவர்கள் மக்காவில் சுமார் 10 வருடங்கள் தங்கியிருந்தார்கள். அக்காலத்திலையோ அல்லது ஹஜ் உம்ராவின் போதோ நபியவர்கள் அக்குகையைத் தரிசித்ததாக எந்த அறிவிப்புக்களும் இடம்பெறவில்லை. தோழர்கள் அதனைத் தரிசித்ததாகவும் எந்த அறிவிப்புக்களும் இடம்பெறவில்லை. எனவே அல்லாஹ்வை வணங்கும் ரீதியில் இந்த இடத்தைத் தரிசிப்பது நபிவழிக்கு முரணானது. எனவே அதைச் செய்தவரிடமிருந்து அது ஏற்றுக் கொள்ளப்படாமல் தட்டப்பட்டுவிடும். அக்குகையை தொடுதல், குறிப்பிட்ட துஆக்களை ஓதுதல், பரகத் தேடுதல் போன்றன தரிசிப்பதை விட மிக மோசமானது என்பதிலும், தெளிவான வழிகேடு என்பதிலும் எவ்வித ஐயமுமில்லை.

## 3.ஸௌர் குகை :

குரைஷிக் காபிர்கள் தங்களை கண்டுபிடித்து விடக்கூடாதென்பதற்காக ஹிஜ்ரத்தின் போது நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களும் ஒரு சில தினங்கள் தங்கியிருந்த குகைதான் ஸௌர் எனப்படுகின்றது. மார்க்க ரீதியான எந்தச் சிறப்பும் இக்குகைக்குக் கிடையாது. இதனைத் தரிசிக்கும்படி நபி (ஸல்) அவர்கள் மக்களைத் தூண்டியதாகவோ, அவர்களோ அவர்களது தோழர்களோ ஹிஜ்ரத்திற்குப் பின் அதனைத் தரிசித்ததாகவோ எவ்வித ஆதாரங்களோ இடம்பெறவில்லை. இது போன்ற புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட தரிசிப்புக்களை எங்கிருந்துதான் மக்கள் கொண்டு வருகிறார்கள்?.

## 4. உஹது மலைக்குகைகள் :

ஹஜ் மற்றும் உம்ராச் செல்வோர் வணக்கம் என்ற அடிப்படையில் அதிலே நன்மையிருப்பதாக் கருதி இதனைத் தரிசிக்கச் செல்கின்றனர். இச்செயலுக்கு எவ்வித ஆதார அடிப்படைகளும் இல்லை.

### 5. அரபா மலையுச்சி (ஜபலுர்ரஹ்மா) :

ஜபலுர்ரஹ்மா என்ற அரபாவிலுள்ள மலைக்கு ஏறாமல் அரபாவில் தரிப்பது நிறைவேற மாட்டாது என முஸ்லிம்களில் பலர் கருதிக் கொண்டிருக்கின்றனர். அவர்களிலும் சிலர் தன்னை வருத்திக் கொண்டு மலையுச்சிக்கே செல்பவரும் உளர். இதுவும் எவ்வித ஆதார அடிப்படைகளுமற்ற ஒரு செயலாகவும் ஏற்றுக் கொள்ளப் படாததாகவும் உள்ளது. மாறாக, உரனா என்ற பள்ளத்தாக்கைத் தவிர்ந்த அரபாவின் ஏனைய அனைத்துப் பகுதியிலும் நிற்கலாம். அரபாவின் நிலப்பரப்பை வரையறுக்கும் நில அளவையாளர்கள் இதனை தெளிவாக வரையறுத்துள்ளனர். அரபா மலைக்கோ அல்லது அதன் உச்சிக்கோ ஒரு ஹாஜி ஏற முயற்சிக்கத் தேவையில்லை. அதன் மூலம் அல்லாஹ்வை நெருங்கவும் தேவை இல்லை. குறிப்பாக மற்றவர்களை நெருக்கிக் கொண்டும் பிரச்சினைப் படுத்திக் கொண்டும் (இதனை நிறைவேற்றத் தேவையில்லை).

## வணக்கம் என்ற அடிப்படையில் பொதுவாகத் தரிசிக்க வேண்டிய இடங்கள்

**எனினும் ஹஜ் மற்றும் உம்ராவில் தரிசிக்கவென குறிப்பிட்ட இடங்களாக இவை இடம்பெறவில்லை.**

அவ்வாறு பொதுவாகத் தரிசிக்க வேண்டிய இடங்களிலுள்ளதுதான் மண்ணறைகள் (சமாதிகள்). மரணத்தை நினைவு கூறவும், படிப்பினை பெறவும் நல்லமல்களைக் கொண்டு மறுமைக்குத் தயாராகவும், பாவங்களை விட்டும் தூரமாகவுமே இது மார்க்கமாக்கப் பட்டுள்ளது. என்றாலும் இன்று அங்கு நடைபெறும் செயற்களால் நெற்றி சுருங்குகின்றது. ஆண், பெண் கலப்படம், வேறு சிலர் மரணித்தவர்களிடம் பிரார்த்தனை செய்து அவர்களிடம் பாதுகாப்புத் தேடுவது போன்ற செயற்கள் அங்கு நடைபெறுகின்றன. நபி (ஸல்) அவர்கள் இத்தகையோரைக் கண்டிருந்தால் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருப்பார்கள். உனக்கும் இத்தீமையைத் தடுக்க சக்தியிருந்தால் மண்ணறையைத் தரிசித்து, அங்கு நலவை ஏவி, கெடுதியைத் தடுத்து நிறுத்து, அல்லாஹ்விடத்தில் அதற்கான நற்கூலியை எதிர்பார்த்திரு.

மண்ணறைகளைத் தரிசிப்பதைப் பொதுவாக மார்க்கமாக்கப் பட்டிருந்தாலும், சிலர் ஹஜ் மற்றும் உம்ராவின் போது சில தனிநபர்களுடைய

மண்ணறைகளைக் குறிப்பாகத் தரிசிக்கின்றனர். அவ்வாறு அந்த சமாதிகளுக்கு எவ்விதத் தனிச்சிறப்பும் இல்லாதபோதும் (அவர்கள் குறிப்பாக்கின்றனர்). அது போன்ற சில மண்ணறைகள் பின்வருமாறு :

## 1. மக்காவிலுள்ள அல்முஅல்லா மண்ணறை :

இதில் பல நபித்தோழர்களின் சமாதிகள் உள்ளன. அன்னை கதீஜா (ரலி) அவர்களின் சமாதியும் அங்குதான் உள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும் நபி (ஸல்) அவர்களிடத்தில் அன்னையாருக்கு அதிக மதிப்பிருந்தும் ஹஜ்ஜிலோ உம்ராவிலோ நபியவர்கள் அன்னையரின் சமாதியைக் குறிப்பிட்டு தரிசித்ததாக எந்த செய்திகளும் வரவில்லை.

## 2. உம்முல் முஃமினீன் மைமூனா (ரலி) அவர்களின் சமாதி :

இது மக்காவிற்கு வெளியே மதீனா நோக்கிச் செல்லும் அதிவேகப் பாதையின் ஆரம்பத்தில் உள்ளது. ஹஜ்ஜிலோ உம்ராவிலோ நபியவர்கள் அன்னையரின் சமாதியைக் குறிப்பிட்டு தரிசித்ததாக எந்த செய்திகளும் வரவில்லை. ஏனைய சமாதிகளைத் தரிசிப்பதன் சட்டமே இச்சமாதிக்கும் உள்ளது.

## 3. ஹவ்வா.ஃ. (அலை) அவர்களின் சமாதி :

இது எங்களுடைய தாய் ஹவ்வா.ஃ. (அலை) அவர்களுடையதாக எண்ணப்படும் சமாதியாகும். ஜித்தா நகரத்தில் உள்ள வெளிவிவகார அமைச்சின் கட்டிடத்திற்கு முன்பாக உள்ளது. இது அன்னையருடைய சமாதிதான் என்று ஒருவருக்கு எவ்வாறு நிரூபிக்க முடியும்? இது ஆச்சரியமாக உள்ளது. எது எவ்வாறிருப்பினும் நபி (ஸல்) அவர்கள் அதனைத் தரிசிக்கவோ அல்லது அதற்குத் தூண்டவோ இல்லை. அது ஒரு சமாதி என்று நிரூபனமாகாத போது வணக்கமாகக் கருதி அதனைத் தரிசிப்பது நபிவழிக்கு முரணாயிருப்பது போல் பகுத்தறிவுக்கும் அது முரணானது. குறிப்பாக இணைவைப்பின்பால் இட்டுச் செல்லும் (அந்த சமாதியைக் கொண்டு) பரகத் தேடுதல்,

உதவி தேடுதல் போன்ற வழமையாக நடைபெறும் செயற்களும் சேர்ந்தால் (அதன் விபரீதம் இன்னும் கடுமையாகி விடும்).

## 4. நபியவர்களின் தாய் ஆமினாவின் சமாதி:

அவ்விடத்தில் பல தடுக்கப்பட்ட விடயங்கள் நடை பெறுகின்றன. உதாரணமாக: தொழுதல், அந்த சமாதிக்கு மேலால் பணம், துணிமணிகள் போன்றவற்றை போடுதல், அதனை வலம் வருதல், அதன் மூலம் பரகத் தேடுதல் போன்றனவாகும். ஹஜ்ஜிலோ உம்ராவிலோ நபியவர்கள் தனது தாயாரின் சமாதியைக் தரிசித்ததாக எந்த செய்திகளும் வரவில்லை. அந்தப் பெண்ணுடைய சமாதியைத் தரிசிப்பதில் கூறத்தக்க எந்த சிறப்புமில்லை. மாறாக அல்லாஹ் நபியவர்களுக்கு தனது தாயாருக்காக பாவமன்னிப்புத் தேட அனுமதியளிக்கவில்லை என்பது ஆதார பூர்வமாக வந்துள்ளது.

ஸஹீஹ் முஸ்லிம் என்ற நபிமொழிக் கிரந்தத்தின் விரிவுரையில் இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : ‘‘எனது தாயருக்காக பாவமன்னிப்புத் தேட என்னுடைய இறைவனிடத்தில் அனுமதி கோரினேன். அவன் அனுமதிக்கவில்லை. அவருடைய சமாதியைத் தரிசிக்க

அனுமதி கோரினேன். அவன் அதற்கு அனுமதியளித்தான்'' என்ற நபியவர்களின் கூற்றானது, இணைவைப்பாளர்களை உயிரோடிருக்கும் போதும், அவர்கள் மரணித்த பின்பு அவர்களது மண்ணறைகளையும் தரிசிக்க முடியும் என்பதற்கு ஆதாரமாக உள்ளது. ஏனெனில் அவர்கள் மரணித்தபின் சமாதியையே தரிசிக்கலாம் என்கிறபோது வாழ்நாளில் (உயிரோடுள்ள நிலையில்) தரிசிப்பது மிக அருகதையானது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

ُ□□□□ َلقمان: ١٥

இவ்வுலக வாழ்க்கையில் அவர்கள் இருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக் கொள். (லுக்மான் :15). மேற்கண்ட நபிமொழியில் நிராகரிப்பாளர்களுக்காக பாவமன்னிப்புத்தேட முடியாது என்பதற்கும் ஆதாரம் உள்ளது. காழீ இயாழ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : நபியவர்கள் தனது தாயாரின் சமாதியைத் தரிசிக்கக் காரணம், அந்த சமாதியைப் பார்ப்பதன் மூலம் பலமான உபதேசம் பெறுவதை நாடினார்கள். அந்நபிமொழியின் இறுதி வார்த்தைகள் இதனை உறுதிப் படுத்துகின்றது:

“நீங்கள் சமாதிகளைத் தரிசியுங்கள். அது உங்களுக்கு மறுமையை நினைவூட்டும்” [(1)].

## குறிப்பிட்ட சில மண்ணறைகளைத் தரிசிப்பது விரும்பத்தக்கது :

### 1. நபியவர்களின் கப்ரை (மண்ணறை, சமாதி) தரிசித்தல் :

நபியவர்களின் கப்ருக்கு முன்னால் போய் நின்றுகொண்டு பின்வருமாறு ஸலாம் கூறுவார் : அஸ்ஸலாமு அலைக அய்யுஹந் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு, ஸல்லல்லாஹு அலைக வஜஸாக அன் உம்மதிக கைரா.'..

பொருள் : நபியே, உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும், அவனது ரஹ்மத்தும் (அருள்), பரகத்தும் (அபிவிருத்தி) உண்டாவதாக. அல்லாஹ் உங்கள் மீது ஸலவாத் சொல்வானாக. உங்கள் சமூகம் சார்பாக உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

---

([1]) ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம் (பாகம் : 7, பக்கம் 45).

## 2. இரு நபித்தொழர்களான அபூபக்ர் , உமர் ஆகியோரின் கப்ரைத் தரிசித்தல் :

நபயவர்கள் மீது ஸலாம் சொன்னதன் பின்னால் வலது பக்கமாக ஓரிரு எட்டுக்கள் நடந்து அபூபக்ர் (ரலி) அவர்களின் கப்ருக்கு நேராகப் போய் நின்று பின்வருமாறு ஸலாம் சொல்வார் : அஸ்ஸலாமு அலைக யா அபாபக்ர், கலீபத ரஸூலில்லாஹ், வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு, ரலியல்லாஹு அன்க, வஜஸாக அன் உம்மதி முஹம்மதின் கைரா.ஃ..

பொருள் : நபியவர்களின் பிரதிநிதியான அபூபக்ரே, உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும், அவனது ரஹ்மத்தும் (அருள்), பரகத்தும் (அபிவிருத்தி) உண்டாவதாக. அல்லாஹ் உங்களைப் பொருந்திக் கொள்வானாக. முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகம் சார்பாக உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

பின்பு வலது பக்கமாக ஓரிரு எட்டுக்கள் நடந்து உமர் (ரலி) அவர்களின் கப்ருக்கு நேராகப் போய் நின்று பின்வருமாறு ஸலாம் சொல்வார் : அஸ்ஸலாமு அலைக யா உமர், அமீரல் முஃமினீன், வரஹ்மதுல்லாஹி

வபரகாதுஹுஃ, ரலியல்லாஹுஃ அன்க, வஜஸாக அன் உம்மதி முஹம்மதின் கைரா.்..

பொருள் : அமீருல் மு.்.மினீனான உமரே, உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும், அவனது ரஹும்மத்தும் (அருள்), பரகத்தும் (அபிவிருத்தி) உண்டாவதாக. அல்லாஹ் உங்களைப் பொருந்திக் கொள்வானாக. முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகம் சார்பாக உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

**3. பகீ.்.. மண்ணறையைத் தரிசித்து அதிலுள்ள முஸ்லிம்களுக்கு ஸலாம் சொல்லல் :**

உஸ்மான் (ரலி) அவர்களின் கப்ருக்கு நேராகப் போய் நின்று பின்வருமாறு ஸலாம் சொல்வார் : அஸ்ஸலாமு அலைக யா உஸ்மான், அமீரல் மு.்.மினீன், வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹுஃ, ரலியல்லாஹுஃ அன்க, வஜஸாக அன் உம்மதி முஹம்மதின் கைரா.்..

பொருள் : அமீருல் மு.்.மினீனான உஸ்மானே, உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும், அவனது ரஹும்மத்தும் (அருள்), பரகத்தும் (அபிவிருத்தி) உண்டாவதாக. அல்லாஹ் உங்களைப் பொருந்திக்

கொள்வானாக. முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகம் சார்பாக உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

### 4. உஹதுக்குப் போய் ஹம்ஸா (ரலி) மற்றும் ஏனைய ஷுஹதாக்களைத் தரிசித்தல்:

அங்குள்ள அனைவருக்கும் பொதுவாக ஸலாம் சொல்லி, அல்லாஹ்விடத்தில் அவர்களுடைய பாவமன்னிப்பு, அருள், பொருத்தம் ஆகியவற்றுக்காகப் பிரார்த்திக்க வேண்டும்.

## பொதுவாக வணக்கம் செலுத்த அனுமதிக்கப்பட்ட இடங்கள்

**எனினும் அதே இடங்களை வணங்குவதற்காகவே நாடிச் செல்லல் மார்க்கமாக்கப்பட மாட்டாது.**

இவை மதீனாவிலுள்ள சில மஸ்ஜிதுகளாகும். ஏனைய மஸ்ஜதுகளை விட இவற்றிற்கு எவ்விதத் தனிச்சிறப்பும் கிடையாது. பூமியிலே அல்லாஹ்வுடைய வீடுகள் என்பது மஸ்ஜிதுகள்தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும் அல்குர்ஆன், ஹதீஸிலிருந்து எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் மஸ்ஜிதுகளில் ஒன்றை விட இன்னொன்றை தரிசிப்பது கொண்டோ, அல்லாஹ்வின்பால் நெருக்கம்பெற தொழுவது கொண்டோ சிறப்பிக்க முடியாது. உதாரணமாக : மஸ்ஜிதுல் ஹராம் (மக்கா), மஸ்ஜிதுந்நபவீ (மதீனா), மஸ்ஜிதுல் அக்ஸா (பலஸ்தீன்), மஸ்ஜிது குபா.: (மதீனா) (போன்ற மஸ்ஜிதுகளுக்குத் தனிச்சிறப்புக்கள் ஆதார அடிப்படையில் இடம் பெற்றுள்ளன).

மாறாக ஒரு முஸ்லிமுக்கு எவ்விடத்தில் தொழுகை நேரம் வருகிறதோ அப்போது அஹ்லுஸ் ஸுன்னாக்களுடைய எந்த மஸ்ஜிதிலும் தொழுது கொள்வார். எனவே நபிவழிக்கு முரணாயிருப்பதால் இது போன்ற (ஆதாரபூர்வமாக சிறப்புக்கள் கூறப்படாத) மஸ்ஜிதுகளைக் குறிப்பிட்டு தொழுகைக்கோ ஏனைய

வணக்கத்திற்கோ நாடிச் செல்லலாகாது. (இது போன்று வணக்கங்களுக்காக நாடிச் செல்வதே கூடாதென்கிற போது) அம்மஸ்ஜிதுகளைக் கொண்டு பரகத் தேடுதல், அதன் சுவர்களைத் தொடுதல், அங்கு முடிச்சுக்கள் போடுதல் போன்ற, அறிவீனர் செய்யும் இணைவைப்பு அல்லது அதற்கு வழிவகுக்கும் பாவங்கள் (அறவே தடை செய்யப்பட வேண்டியவையாகும்).

இவைதான் மதீனாவில் ''அல்மஸாஜிதுஸ் ஸப்ஆ'' என்ற அறியப்படும் ஏழு பள்ளிவாயில்களாகும். அவற்றில் ஆறு பள்ளிவாயில்கள் தொடராக உள்ளன. மஸ்ஜிது அபீபக்ராகிய ஏழாவது பள்ளிவாயில் பிற்காலத்தில் உடைந்து விட்டது.

### 1. மஸ்ஜிதுல் பத்ஹ் அல்லது மஸ்ஜிதுல் அஹ்ஸாப் :

ஏழு மஸ்ஜிதுக்களிலும் இதுதான் பெரிய மஸ்ஜிதாகும். (இது) ஸில.். என்ற மலையின் மேற்கு சாய்வுப் பகுதியிலுள்ள மேட்டுநிலத்தில் கட்டப்

பட்டுள்ளது. (அஹ்ஸாப் என்ற) அந்தப் போரின் முடிவு முஸ்லிம்களுக்கு வெற்றியாக அமைந்ததையடுத்தே அந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

**2. மஸ்ஜிது ஸல்மானில் பாரிஸீ :**

இது மஸ்ஜதுல் பத்ஹிற்குத் தெற்குத் திசையில் அதிலிருந்து 20 மீட்டர் தொலைவில் ஸில.்.் மலையடிவாரத்தில் உள்ளது. அகழ்ப்போரின் போது மதீனாவை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க அகழிகளை வெட்டுமாறு ஆலோசனை வழங்கிய ஸல்மானுல் பாரிஸீ (ரலி) அவர்களின் பெயர் இப்பள்ளிவாயிலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**3. மஸ்ஜிது அபீபக்ர் அஸ்ஸித்தீக் :**

மஸ்ஜிது ஸல்மானுல் பாரிஸீயிற்குத் தென்மேற்குத் திசையில் அதிலிருந்து 15 மீட்டர் தூரத்தில் இப்பள்ளிவாயில் காணப்பட்டது. முன் கூறப்பட்ட இரு பள்ளிவாயில்களுடன் சேர்த்து இதுவும் கட்டப்பட்ட பின்னர் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. எனினும் இது பிற்காலத்தில் உடைந்து விட்டது.

**4. மஸ்ஜது உமர் இப்னில் கத்தாப் :**

மஸ்ஜிது அபீபக்ரிற்கு அடுத்ததாக தெற்குத் திசையில் சுமார் 10 மீட்டர் தொலைவில் உள்ளது. செவ்வக வடிவிலான நடைகூட அமைப்பில் உள்ள இதற்கு அதே வடிவமைப்பில் ஒரு திறந்த முற்றவெளியும் உள்ளது. பூமியிலிருந்து 8 படிகள் அளவு இது உயர்ந்துள்ளது. மஸ்ஜிதுல் பத்ஹ் போன்றே இதனுடைய கட்டிட அமைப்பும் உள்ளது. சிலவேளை அப்பள்ளியுடன் சேர்த்தே இதுவும் கட்டப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கலாம்.

### 5. மஸ்ஜிது அலீ இப்னி அபீ தாலிப் :

மஸ்ஜிது பாத்திமாவிற்குக் கிழக்குத் திசையில் மேட்டுப் பகுதியில் செவ்வக வடிவில் இப்பள்ளிவாயில் அமைந்துள்ளது. அஹ்ஸாப் போரின் போது அகழியைத் தாண்டிய அம்ரு பின் வத்த் அல் ஆமிரீ என்பவனை அலீ (ரலி) அவர்கள் இவ்விடத்தில்தான் கொன்றார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

### 6. மஸ்ஜிது பாத்திமா பின்துர் ரஸூல் (ஸல்) :

வரலாற்று நூல்களில் மஸ்ஜித் ஸஃத் பின் முஆத் என்று பெயரிடப்படுகின்றது. இந்த ஏழு மஸ்ஜித்களில்

இதுவே மிகச்சிறிய மஸ்ஜிதாகும். மஸ்ஜித் அலீ பின் அபீ தாலிபிற்குத் தெற்குத் திசையிலுள்ளது.

### 7. மஸ்ஜிதுல் கிப்லதைன் :

மேற்கூறப்பட்ட பள்ளிவாயில்களில் ஏழாவது பள்ளியாக சிலர் இப்பள்ளியைக் கணிக்கின்றனர். இதில்தான் மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து மஸ்ஜிதுல் ஹராத்தை நோக்கி கிப்லா மாற்றப்பட்டு நபியவர்களுக்கு வஹீ இறங்கியது. அதிலிருந்து இப்பள்ளி மஸ்ஜிதுல் கிப்லதைன் (இரு கிப்லாக்களுடைய பள்ளிவாயல்) என்று அறியப்பட்டது. ஏனெனில் நபியவர்கள் அதில் ஒரு தொழுகையின் பாதியை மஸ்ஜிதுல் அக்ஸா நோக்கியும் மறுபாதியை மஸ்ஜிதுல் ஹராத்தை நோக்கியும் தொழுதார்கள்.

எனினும் தொழுகைக்காகத் தரிசிக்க நாடிச் செல்வது ஸுன்னத்தான இடங்களில் மஸ்ஜிது குபா.ஃ.வும் ஒன்றாகும். வுழூச் செய்து கொண்ட பின் அங்கு சென்று தொழுவார். நபி (ஸல்) அவர்கள் வாகனத்தில் பயணித்தவராகவும், கால்நடையாகவும் குபா.ஃ.வுக்கு வந்து அங்கு இரண்டு ரக்அத்கள் தொழுவார்கள் என இப்னு

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி 1194 , முஸ்லிம் 1399).

**நேசத்திற்குரிய எனது சகோதரனே!**

ஹஜ் மற்றும் உம்ராக் காலங்களில் நீ தரிசிக்க நினைக்கும் இது போன்ற இடங்களுக்கு எவ்வித தனிச்சிறப்பும் இல்லையென உனக்கு நான் கூறிவிட்டேன். இது போன்ற இடங்களில் நடைபெறும் சில மார்க்கத்திற்கு முரணான காரியங்களையும் உனக்கு நான் கூறிவிட்டேன். உனது நேசத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் ஒரு கூற்றையும் உனக்கு நான் நினைவூட்டுகின்றேன். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “யாராவது எங்களுடைய இந்த மார்க்கத்தில் அதில் இல்லாததை உருவாக்கினால் அது தட்டப்பட்டுவிடும்”. (அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி), ஆதாரம் : புஹாரி 2697, முஸ்லிம் 1718). யார் மார்க்கத்தில் எந்தவொரு அடிப்படையும் இல்லாத ஒரு வணக்கத்தைச் செய்கிறாரோ, அதை அவர் நல்லதாகக் கருதினாலும் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. “(மார்க்க) விடயங்களில் மிகவும் கெட்டது (அதில்) புதிதாக உருவாக்கப் பட்டதாகும். புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்தும்

பித்அத்தாகும் (நூதனங்கள்). பித்அத்கள் அனைத்தும் வழிகேடாகும். வழிகேடுகள் அனைத்தும் நரகத்தின்பால் இட்டுச் செல்லும். (ஆதாரம்: இப்னு குஸைமா பாகம் 3, பக்கம் 143) என்ற நபிமொழியையும் உனக்கு நினைவு படுத்துகின்றேன்.

இது போன்ற பித்அத்களைச் செய்வோர் மறுமையில் நபியவர்களுடைய (ஹவ்ழ்) நீர்த் தடாகத்திற்கு வரமுடியாமல் தடுக்கப்படுவார்கள், அவர்களைவிட்டும் தூரமாக்கப்படுவதற்குக் இந்த பித்அத்கள் காரணமாக அமைகின்றன என்பதனையும் இறுதியாக உனக்கு நினைவூட்டிக் கொள்கிறேன். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களுக்கு முன்பே “அல்கவ்ஸர்“ தடாகத்திற்குச் சென்று (நீர் புகட்டக்) காத்திருப்பேன். யாருக்கு என்னிடம் வர முடிகிறதோ அவர் (அந்தத் தடாகத்தின் நீரை) அருந்துவார். (அதை) அருந்துகிறவருக்கு இனி ஒருபோதும் தாகமே ஏற்படாது. (இந்நிலையில்) என்னிடம் சிலர் வருவார்கள். அவர்களை நான் அறிந்துகொள்வேன். என்னையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள். பிறகு எனக்கும் அவர்களுக்கும் இடையே தடுப்பு ஏற்படுத்தப்படும். “(இறைவா!) இவர்கள் என்னைச்

சேர்ந்தவர்கள் என்று நான் கூறுவேன். அதற்கு "உங்களுக்குப் பின்னால் இவர்கள் (புதிது புதிதாக) உருவாக்கியதை நீங்கள் அறியமாட்டீர்கள் என்று சொல்லப்படும். உடனே நான் "எனக்குப் பின்னால் (தம் மார்க்கத்தை) மாற்றி விட்டவர்களை இறைவன் தன் கருணையிருந்து அப்புறப் படுத்துவானாக! அவர்களை இறைவன் தன் கருணையிலிருந்து அப்புறப்படுத்துவானாக! என்று (இரண்டு முறை) கூறுவேன். (புஹாரி 6583, 6584).

உன்னுடைய நபியவர்களிடமிருந்து நீ தடாகத்தில் நீர் அருந்தும் பாக்கியமற்றவனாக மாற விரும்புகிறாயா? அல்லது உனக்கும் அவருக்கும் இடையில் திரையிடப்பட்டு அவரை விட்டும் தூரப் படுத்தப்பட்டு, - அல்லாஹ் பாதுகாப்பானாக - "எனக்குப் பின்னால் (தம் மார்க்கத்தை) மாற்றிவிட்டவர்களை இறைவன் தன் கருணையிருந்து அப்புறப்படுத்துவானாக! அவர்களை இறைவன் தன் கருணையிலிருந்து அப்புறப்படுத்துவானாக!" என்று கூறப்படுவதை நீ விரும்புகிறாயா?

**எனதன்புக்குரிய சகோதரனே!**

பொதுவாக அனைத்து பித்அத்களும் வழிகேடு எனும்போது அந்த பித்அத்களில் மிகத்தீயது இணைவைப்பாக அல்லது அதன்பால் இட்டுச்செல்லக் கூடியதாக இருக்கும் பித்அத்களாகும். பெரிய இணைவைப்பிற்குரிய தண்டனை நிரந்தர நரகமாகும். – அல்லாஹ் பாதுகாப்பானாக -. அவற்றில் அதிகமானது மேற்கூறப்பட்ட இடங்களில் நடப்பதாகும். என் சகோதரனே நாம் நரகத்தை விட்டும் விரண்டோடி, அல்லாஹ்விடம் சுவனத்தை வேண்டக்கூடியோர். (அப்படியிருக்கும் போது) இது போன்ற செயற்களை எவ்வாறு நாம் எமக்கே பொருந்திக் கொள்வோம்?

**அச்செயற்களில் சில :**

1. நூல்நிலையம், சமாதிகள், மலையுச்சி போன்றவற்றை வலம் வருதல். க.:.பாவை மாத்திரம்தான் வலம் வர முடியும்.

2. சமாதிகளை நோக்கித் தொழுதல், அவற்றை கிப்லாவாக எடுத்துக் கொள்ளல்.

3. அல்லாஹ் அல்லாதோரிடத்தில் பிரார்த்தித்து, எமது தேவைகளை அவற்றிடம் கேட்டல். நபி (ஸல்) அவர்களிடமோ அல்லது ஏனைய மரணித்தோரிடமோ பிரார்த்தித்து, அவர்களிடம் பாதுகாப்புத் தேடல்.

4. நூல்நிலையம், சமாதிகள், குகைகள் போன்றவற்றின் சுவர்களை அல்லது வேறு சில இடங்களின் மண்ணை வைத்து பரகத் தேடுதல்.

5. மரங்கள் அல்லது வேறு இடங்களில் முடிச்சுகள் போடுதல், அல்லது பிரார்த்தனை போன்ற விடயங்கள் எழுதப்பட்ட தாள்களை அங்கு போடுதல்.

6. சமாதிகளைச் சூழவுள்ள சுவர்களையும், அதன் அடித் தண்டுகளையும் தொட்டு, நூல்களை அதில் கட்டி பரகத் தேடுதல்.

7. சமாதிகளில் அடங்கப் பட்டிருப்பவர்களை நெருங்குவதற்காக (உண்டியல்களில்) பணங்கள் போட்டு, அவற்றின் மீது நறுமணங்கள் கொட்டுதல்.

8. தொழுகையில் வலது கையை இடது கைமீது வைத்து அழுகையுடனும் உள்ளச்சத்துடனும் நிற்பது போன்று சிலர் சமாதிகளுக்கு முன் நிற்றல்.

இறுதியாக எனதன்பிற்குரிய சகோதரனே!

உனது இந்தப் பயணத்திலும், எதிர் காலத்திலும் உனது நாயனின் வேதத்தையும், உனது நபியின் ஸுன்னாவையும் கொண்டு நற்காரியங்கள் புரிய அல்லாஹ் உனக்கு அனுகூலம் புரிய வேண்டுமென்று அவனிடத்தில் பிரார்த்திக்கின்றேன். கிழக்கிற்கும் மேற்கிக்கும் இடையில் தூரத்தை ஏற்படுத்தியது போன்று உனக்கும் பித்அத்கள், பாவங்கள், தவறுகளுக்கும் இடையில் தூரத்தை ஏற்படுத்துவானாக. அன்று பிறந்த பாலகர்களைப் போன்று தவறுகளிலிருந்து தூய்மைப் படுத்தப்பட்டவர்களாக, பாவங்கள் மன்னிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுடன் திரும்பக் கூடிய கூட்டதில் உன்னையும் அல்லாஹ் ஆக்கிவைப்பானாக.

எங்களுடைய கடைசிப்பிரார்த்தனை அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் என்பதாகும். எங்கள் நபி முஹம்மத் அவர்கள் மீதும்,

அவர்களின் தோழர்கள் மற்றும் கிளையார்கள் மீதும் நாயனே நீ ஸலவாத்தும் ஸலாமும் சொல்வாயாக!.